# ஆக்க வேலைக்கு ஆதரவு தரும் யாழ் அரசாங்க அதிபர்

சென்ற 27.03.2017 அன்று மனிதத்தின் குழு யாழ்பாண அரசாங்க அதிபரை சென்று சந்தித்தது. அச் சந்திப்பில் மூன்று பிரதான விடயங்கள் பற்றி அவருடன் உரையாடலின் போது தெரிவித்தது.

யாழ்குடாநாட்டின் மண்வளம் உவர்த் தன்மையினால் சீர்கெட்டு வருவதையும் கிணறுகள் உவர் நீர் தன்மை அடைவதும் ஒரு பாரிய பிரச்சனையாக இருப்பது யாவரும் அறிந்ததே. இந்த நிலைமையினை கட்டுப்படுத்தாமல் விட்டுக்கொண்டே வருவோமானால் இன்னும் சில சகாப்தங்களில் குடாநாடு உவர் மண் வலையமாக மாறக் கூடும் என்ற பயம் பலருக்கு உண்டு. 1960ம் ஆண்டுகளில் இருந்து இப் பிரச்சனை கவனத்திற்கு எடுக்கப்பட்டு சில வளிமுறைகள் சில ஆய்வுகளின் மூலம் எடுக்கப்பட்டிருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்தி முழுமையாக்க முடியவில்லை. மழை வீழ்ச்சி நீரை பக்குவப்படுத்தும் ஒரு திட்டமாக எந்திரி ஆறுமுகத்தின் திட்டம் பலராலும் ஏற்கப்பட்டிருந்தது.

அதற்காக சில உப்பேரிகளில் நன்நீரை சேமித்து அதன் உப்பின் தாக்கத்தை குறைவடையச் செய்யும் இத் திட்டத்திற்கு சில தடுப்பணைகள் கட்டப்பட்டது. கடலில் இருந்து உவர்நீர் நாட்டிற்குள் வராமலும் மழையினால் கிடைக்கும் நன்நீர் தானாக வெளியேறி கடலை அடைய விடாமல் தடுப்பதற்கும் இவ் அணைகள் பாவிக்கப்பட்டன. இது யாழ் குடாநாட்டின் மண்வளத்தை மீட்டெடுப்பதற்கு தேவையான கட்டுமானங்களாக இருந்தன. ஆனையிறவு உப்பேரி வடமராட்சி உப்பேரியுடன் தொடர்புபடுத்த ஒரு வாய்க்கால் அமைப்பு கட்டப்பட தேவைப்படுகின்றது. இந்த வாய்க்கால் வேலைகள் முடிவடைந்தால் ஆனையிறவு ஏரிக்கு வந்தடையும் இரணைமடுக்குளம் நிரம்பி மேலதிகமாக வடியும் நீர் வாய்க்கால் மூலமாக வடமராட்சி ஏரிக்கு செல்லக் கூடியதாக இருக்கும். இது சுண்டிக்குளத்தில் உடைப்பு ஏற்பட்டு கடல் நீருடன் கலக்காதிருக்க வழிவகுக்கும். இந்த வாய்க்கால் வேலை நடைபெறுவதாகவும் அந்த வேலைக்கு தேவையான செயற்பாடுகளும் துரிதமாக இடம் பெறுவதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இரண்டாவது விடயமாக பாடசாலைகளில் 4ம் 5ம் வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளுக்கு யோகாசனப் பயிற்சி ஒரு பாட விதானமாக படிப்பித்தல் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனையை மனிதக்குழு முன்வைத்தது.

இது பற்றி ஏற்கனவே மனிதம் பத்திரிகையில் விரிவான கட்டுரைகள் போடப்பட்டிருந்ததையும் நினைவில் கொள்ளலாம். 30 வருட உள்நாட்டு போர் காரணமாக அரசாங்கத்திற்கு எதிராக வன்முறையிலான யுத்தத்தால் சீரளிந்து,

திசைமாறி குறிக்கோள் இல்லாது வாழும் இன்றைய இளம் சமுதாயம் மீண்டும் சமுதாய வாழ்க்கை அமைப்பில் ஒரு ஆரோக்கியமான நிம்மதியான நல்ல உணர்வுகளோடு வாழ உதவுவது இன்றைய காலகட்டத்தின் தேவையாகும். வருங்கால சந்ததியினரின் வாழ்க்கையை வளமாக்க பிள்ளைகளுக்கு சிறு வயதில் இருந்தே யோகாசனக் கல்வியை கற்றுவித்து உடல் ஆரோக்கியத்தையும் உள்ளத்தில் உயர்வான எண்ணங்களையும் விதைக்க வேண்டிய எண்ணத்தில் இந்த முயற்சி எடுக்கப்படுகின்றது. இது பற்றி அரசாங்க அதிபரிடம் மனிதக்குழு விளக்கியது அசராங்க அதிபர் இவ் விடயம் சார்பாக ஆக்கமான நடவடிக்கைகளில் இறங்க வேண்டுமென்றும் அவரை வேண்டிக்கொண்டது.

இன்னுமொரு விடயமாக கிராம மட்டங்களில் பகுத்தறிவுடன் மனித உரிமை சம்பந்தமான அறிவுக்கும் அதைப் பேணுவதற்கும் அமைப்புக்களை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் மனிதக்குழு முன்வைத்தது. 30 ஆண்டு உள்நாட்டு போரும் அதனால் ஏற்பட்ட தாக்கங்களும் வட கிழக்கு தமிழ் மக்களை இனவாதிகளாக இனங்காணப்பட்டோ அல்லது இனவாதிகளாக செயற்பட்டு வருவதாக பலராலும் விமர்சிக்கப்பட்டோ வருகின்றது. மனித உரிமை செயற்பாடுகள் எந்த அளவிற்கு கடைப்பிடிக்கப்படவேண்டும் என்ற அறிவு இந்த அமைப்பின் உறுப்பினர்களுக்கிடையே விவாதிக்கப்பட்டும் பகிரப்பட்டும் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் பயிற்சி வகுப்புகள் விரிவுரைகள் போன்றவற்றின் மூலமாக புத்திஜீவிகளை உருவாக்கும் எண்ணத்தை வெளிப்படுத்தியது.

மேலும் மக்களுடைய வாழ்க்கையில் மற்றவர்களின் உரிமைகளை மதிக்கும் தன்மை ஏற்பட வேண்டியதன் அவசியத்தை அறிந்தால் மட்டுமே எமக்குள்ள உரிமைகளை நாம் கோருவதற்கு தகுதியானவர்கள் ஆவோம் என்பதால் சிவில் சமூக அமைப்புக்கள் என்ற பெயரிலோ அல்லது மனித உரிமை அமைப்புக்கள் என்ற பெயரிலோ கிராமங்கள் தோறும் அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற விடயத்தையும் அரசாங்க அதிபருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

சமுதாயத்தில் விழிப்பினர்வு பெற வேண்டும், நல்ல மாற்றங்களை அடைய வேண்டும் என்பதற்காக எடுக்கும் எல்லா முயற்சிகளையும் தான் ஆதரிப்பதாகவும் அவற்றிற்கு தன்னாலான செயற்பாடுகளை செய்வதாகவும் மனிதக்குழுவின் முயற்சியை பாராட்டி அரசாங்க அதிபர் கருத்து வெளியிட்டார்.

(ஆ…ர்)